# பதவிகள் - வெற்றிடம்

## நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சின் தொழில் நியாய சபைகள் செயலாளர் அலுவலகத்தின் தொழில் நியாய சபைகள் உதவிச் செயலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2024*

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் தொழில் நியாய சபைகளில் வெற்றிடம் நிலவுகின்ற 20 உதவிச் செயலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகுதிவாய்ந்த இணைந்த சேவைக்கு உரித்தான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் I இன் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், தொழில் நியாய சபைகள் செயலாளர் அலுவலகம், இலக்கம் 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் "தொழில் நியாய சபைகள் செயலாளர் அலுவலகத்தின் தொழில் நியாய சபைகள் உதவிச் செயலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2024.08.12 ஆந் திகதியாகும்.

விண்ணப்பங்களினை இணைந்த சேவையிலுள்ள முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் I இன் உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே இப்பதவிக்காக விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு** : விண்ணப்பமொன்று அல்லது அது சம்பந்தப்பட்ட ஆவணமொன்று அஞ்சலில் காணாமற் போனதாக அல்லது தாமதமாகியதாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் தினம் வரை விண்ணப்பங்களைத் தாமதம் செய்வதனால் ஏற்படக்கூடிய நட்டங்கள் விண்ணப்பதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

01. நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சின் செயலாளரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அவ்வமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை நடாத்தி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

02. **பதவியின் தன்மை** :

இந்நியமனம் நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதுமாகும்.

03. **சம்பள அளவுத்திட்டம்** : MN 02-2016 ரூபா 28,940-10 × 300 - 11 × 350 - 10 × 560 - 10 × 660 - ரூபா 47,990.00

04. **அடிப்படைத் தகுதிகள்** : இணைந்த சேவையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவியில் தரம் I இன் உத்தியோகத்தராக இருத்தல்.

05. **தெரிவு செய்யும் முறைமை** : கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் புள்ளிகளின்படி திறமை வரிசையடிப்படைக் கேற்ப நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் ஒழுங்குமுறை, வெற்றிடம் நிலவுகின்ற தொழில் நியாய சபைகளின் தகவல்கள் மற்றும் முன்னோடி விண்ணப்பப் படிவத்தினை நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் (www.moj.gov.lk) வெளியிடப்பட்டுள்ளது.

06. விண்ணப்பப் படிவத்துடன் தொடர்பான தகவல்கள் தமது கையெழுத்தால் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். அனைத்து வகையிலும் பூரணமாகாத, அடிப்படைத் தகுதிகள் அற்ற நியமித்த தினத்திற்கு பின் கிடைக்கப்பெறும் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்திராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தல்களுமின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்வது பயனுடையதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்துக்கு இணைப்புடையதானதா என்பது பற்றி விண்ணப்பதாரிகள் பரீட்சித்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறில்லையெனின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுமென மேலும் தெரிவிக்கின்றேன். விண்ணப்பப்பத்திரமானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள முன்னோடி விண்ணப்பப் பத்திரத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப் பத்திரம் கிடைக்கப்பெற்றது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

சகல விண்ணப்பங்களும் தாங்கள் தற்போது சேவையிலுள்ள நிறுவனத் தலைவரினூடாக அனுப்பப்பட வேண்டும்.

07. இங்கு குறிப்பிடப்படாத விடயமொன்றெனில், அத தொடர்பாக நீதி. சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரினால் முடிவு எடுக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ்விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சட்ட விதிகளுக்கு ஏற்ப செயற்பட கடப்பாட்டினையுடையவர்களாவர்.

08. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழி மூலமான அறிவித்தல்களில் ஏதேனும் முரண்பாடு காணப்படுமிடத்து அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலின் பிரகாரம் செயற்படல் வேண்டும்.

எம். என். ரணசிங்க,
செயலாளர்,
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு
மறுசீரமைப்பு அமைச்சு.

2024, யூன் 28.

இல. ..........................................
(அலுவலக உபயோகத்துக்காக)

| | | |
|---|---|---|
| மொழிமூலம் | சிங்களம் | |
| | தமிழ் | |